# அரசுக்கு எதிரான சக்திகள் இராணுவத்திற்குள் ஊடுருவல்

(கொழும்பு)

இராணுவத்திற்குள் அரசுக்கும் எதிராக ஒரு பிரிவினர் செயற்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அரசு எதிர்ப்புக் குழுவினரை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் புலனாய்வுப் பிரிவினர் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் குழுவினருக்கும் ஜே.

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 17 இதழ் 18

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 28 - 02 - 1993


## படை நடவடிக்கை குறித்து அதிகாரிகள் மீளாய்வு

(கொழும்பு)

வடபகுதி படை நடவடிக்கைகள் குறித்து படை அதிகாரிகள் மட்டத்தில் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் நோக்குடன் படையினர் தரப்பில் தீட்டப்பட்டு வந்த சகல திட்டங்களும் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதால் கடந்த சில நாட்களாக ராணுவ தாக்குதல்களில் சோர்வு நிலை காணப்படுகிறது.

தொடரும் இராணுவ நடவடிக்கைபற்றியும் இம்மீளாய்வின்போது ஆராயப்படு

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ பதினொரு ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ள ஈழப்போரில் புலிகள் வெற்றி ஈட்டும் வாய்ப்பு அதிகரிப்பு!

## அரசியல் ஆய்வாளர் கணிப்பு

(கொழும்பு)

பதினொரு ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள ஈழப்போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றியீட்டும் சாத்தியங்கள் அதிகமாகத் தென்படுகின்றன என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழத்தைப் பெறுவதற்கு ராணுவ ரீதியானதும் அரசியல் ரீதியானதும் பொருளாதார ரீதியானதும், உளவியல் ரீதியானதும், கோட்பாட்டு ரீதியானதுமான தந்திரோபாயங்களை கடைப்பிடிப்பதன் மூலம் தாங்கள் அடையவேண்டிய இலக்குகளை அடைந்துவருகின்றனர்.

கடந்த வருடம் அவர்கள் எவற்றை அடைய விரும்பினார்களோ அவற்றை அடைந்துள்ளனர். இந்த ஆண்டிலும் அவர்கள் அடைய இருக்கும் குறிக்கோள்களை அடைவார்கள் அதனை எவராலும் தடுக்க முடியாது.

சிறிலங்காவைப் பொறுத்தவரை தெளிவான தந்திரோபாயங்களைக் கொண்ட உறுதியான அரசியல் தலைமைப் பீடம் ஒன்று இருந்தாலன்றி விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது.

சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் புதுவிதமான ஆயுதங்களின் கொள்வனவு படை ரீதியாக விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க உதவாது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரியை சுடமுயன்ற தமிழ் இளைஞர் வத்தளையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

வத்தளையில், போலியகொட பொலிஸ் சுப்பிரெண்டன் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

தகவல் ஒன்று கிடைத்ததன் பேரில் பொலிஸ் சுப்பிரெண்டன் டக்ளஸ் பீரிஸ் வத்தளை சந்தைக்கு சென்றபோது புலிகள் எனக் கூறப்படும் மூவரைக் கொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## படை ஆக்கிரமிப்பு பகுதியில் சிங்கள, முஸ்லிம் குடியேற்றம்

(கொழும்பு)

வன்னிமாவட்டத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சிங்கள, முஸ்லிம் வாசிகள் குடியேற்றப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பாவற்குளம் பகு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்பரப்பில் பலியானபடையினர் தொகை நான்காக அதிகரிப்பு

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை புலிகளின் கண்ணிவெடியில் கடற்படைப்படகு சிக்கிச் சிதறிய சம்பவத்தில் இறந்த படையினரின் தொகை நான்காக அதிகரித்துள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

இப்படகில் பயணம் செய்தவர்களின் இருவர் உடன் பலியானது தெரிந்ததே. இச்சம்பவத்தில் காணமல் போன

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடா கடிதங்கள் விமானத்தில் அனுப்பப்படும்

(கொழும்பு)

யாழ், குடாநாடு மற்றும் தீவகப் பகுதிகளுக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் இனிமேல் விமானம் மூலம் அனுப்புவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலுள்ள அரச அதிபருக்கு வட பகுதிக்கு உணவுப் பொருட்களை அனுப்புமாறு அவசர செய்தி

யாழ்ப்பாணம்

யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் பட்டினிசாவு நிலையிலிருந்து தம்மை காப்பாற்ற உடனடியாக உணவுப்பொருட்களை அனுப்புமாறும் தொடர்ச்சியாக உதவி அரச அதிபர் செயலகங்கள் முன் நடத்தி வரும் மறியல் போராட்டம் பற்றியும் நேற்று கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்று யாழ். குடா நாட்டில் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஊடாக இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

தொடர்ச்சியாக மக்கள் பிரதேச செயலகங்கள் முன் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அத்தியாவசிய

4-ம் பக்கம் பார்க்க

## மருந்து பொருள்களை அனுப்புமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய மருந்துப்பொருட்களை அனுப்பிவைக்குமாறு அரச அதிபருக்கு யாழ். செயலகம் செய்தி அனுப்பியுள்ளது.

மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையினால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதாலும் போதிய மருந்துப் பொருட்கள் இல்லாமையினாலும் மக்கள் துன்புறுவதால் இம் மருந்துப் பொருட்களை கப்பல் மூலம் அனுப்புமாறு அரச அதிபருக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து மருந்துப் பொருட்கள் எடுத்துவர ஆவன செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-இ)

## பதினேழு தமிழ் இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது!

(கொழும்பு)

நீர்கொழும்பில் தங்கியிருந்த பதினேழு தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் தங்கள் பெயர்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு யுத்தத்தால் சிங்களவர்களும் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினால் தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுத்தம் தொடர்வதால் அதிகரிக்கும் பாதுகாப்பு செலவினங்களின் பளு நாட்டின் முழுமக்களையும் பாதிக்கிறது.

இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் போர்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு இன்று 28ம் திகதி நல்லூரில் இடம்பெறவுள்ளதாகவும் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### A/L PERSONAL

Chemistry, Pure / Applied வகுப்புகள் நடைபெறுகின்றன சு. இவனேசராஜன் B. Sc (Cey), மணி பேக்கரி முன்பாக, பருத்தித்துறை வீதி, கலியங்காடு. (இ-7269)

### இசைக்கருவி திருத்துதல்

(Piano Repairs பியானோ திருத்துதலும்) ஓசை சீர்செய்தலும் தொடர்பு: T. கணேசன், பிரதான வீதி, மானிப்பாய் (அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகாமை) (சி-7264)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தசை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் கி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7197)

### (O/L MATHS

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து (O. L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறுடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-7272)

### A/L பௌதிகவியல்

பிரத்தியேக தனிப்பட்ட முறையில் பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியரால் சிறப்பாகக் கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B Sc. (Cey., Dip. Ed. 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (இ 7270

### ஆங்கில வகுப்புக்கள்

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களால் ஆண்டு 5 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர்களுக்கு 1-3-93 தொடக்கம் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். ஆ. சிவகுரு, சேர்ச்றோட், சாவகச்சேரி. (இ 7274)

## இராசி பலன்

**28-02-1993**

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு மாசி 17)

ஸப்தமி பி. இ. 4-46 வரை, கார்த்திகை பி. இ. 3-32வரை சித்தயோகம், கரிநாள், இராகுகாலம் மாலை 4-49 முதல் 6-29 வரை, சுபநேரம் காலை 9-29 முதல் 10-59வரை, கார்த்திகை விரதம்.

மேடம்- காரியவெற்றி, நன்பரி சகாயம், தெய்வீக சிந்தனை.

இடபம்- முரண்பாடு, சகோதரர் பகை, குடும்ப வெறுப்பு.

மிதுனம்- தொழில் சிறப்பு, விருந்து வைபவம், பயண அனுகூலம்.

கடகம்- குடும்ப மகிழ்ச்சி, விடாமுயற்சி, எதிர்பார்த்த வெற்றி.

சிங்கம்- நோய் தணியும், பேச்சாற்றல், திடீர் சந்திப்பு.

கன்னி- தொழில் கஷ்டம், குடும்ப சச்சரவு, யோசனை.

துலாம்- பொருள் தவறுதல், மனச்சஞ்சலம், அவமதிப்பு

விருச்சிகம்- தொழில் மேன்மை, புதிய முதலீடு, கடன் வசூல்.

தனுசு- புதிய போராட்டம், செல்வத்தில் நட்பு புகழ்.

மகரம்- எதிர்பாராத தொல்லை, பணக் கஷ்டம், வேதனை.

கும்பம்- மனப்பயம், இனசன விரோதம், கண்டிப்பு.

மீனம்- மனமகிழ்ச்சி, சுபகாரியம், தொழில் பாராட்டு

ஜோதிடர்

---

யாழ். மாவட்ட

## புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### அறிவித்தல்

**பங்குப் பணம் ரூபா 100/-**

06-03-1992ல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1)ற்கு அமைவாக, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர் ஒருவரின் பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் இயக்குழுத் தேர்தலிலோ, பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்கமுடியாது. எனவே 05-03-93ம் திகதிக்கு முன் தங்கள் பங்குப்பணத்தை ரூபா 100/- ஆக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர். தலைவர்.

27-02-93. (ஏ 2925)

---

வட மாகாண

## புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்

### யாழ்ப்பாணம்

புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும் எமது சங்கத்தால் வழங்கப்படுகின்றன.

வாரத்தில்

(1) செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில்- மாலை 3-00 - 5-00 வரை
ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 00 -12-0) மணி வரை
வாய் பரிசோதனை பல் வைத்திய நிபுணரினால் மேற்கொள்ளப்படும்.

(2) திங்கள், புதன்கிழமைகளில் - மாலை 3-00 - 5-00 மணி வரை.
பெண்களுக்கான மார்புப்பரிசோதனை வழங்கப்படும்

விபரங்களுக்கு சங்கப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்

இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம், (ஏ-2923)

---


## JAM பாவனையாளருக்கு ஒரு நற்செய்தி

உங்கள் அபிமானத்துக்குரிய

**TASTY JAM வகைகள்**

தற்போது அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

**கைக்கடக்கமான பொதிகளில்**

விற்பனைக்கு வந்துள்ளது.

உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிப் பயன்பெறுங்கள்

விலை ரூபா 20/- மட்டுமே.

**TASTE LINE INDUSTRIES (Pvt.) Ltd.,**

14, Seenior Lane, Jaffna

(ஏ-2919)


---

சன சமூக நிலையங்களுக்கு

## மேலதிகமான நிதி வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் ஆதரவில் இயங்குகின்ற பாலர் பாடசாலைகளுக்கும், சன சமூக நிலையங்களுக்கும் மேலதிகமான நிதியைப் பெற்று வழங்க யாழ் சனசமூக நிலையங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, சனசமூக நிலையங்களின் காகிதாதிகளுக்கான செலவினங்களுக்காக ரூபா 250/-ம், பாலர் பாடசாலைகள் இயங்குகின்ற சன சமூக நிலையங்களின் பராமரிப்புக் கென ரூபா 500/-ம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர். (161-இ)

## தென்மராட்சிப் பகுதியில் சிறுதானியச் செய்கை

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, மந்துவில், வரணி, உசன் போன்ற பகுதிகளில் அண்மையில் பெய்த மழையினைப் பயன்படுத்தி தென்மராட்சிப் பகுதியில் உள்ள பயிர் நிலயங்களில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை உடன் மேற்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறுதானியச் செய்கையில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் வகையில் உழவு செய்து கொடுப்பதற்கும், சிறுதானிய விதைகளை விநியோகிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் கொடிகாமத்தில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக தென்மராட்சி கோட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு விதைகளைப் பெற்றுக் கொள்வதுடன் உழவுக்குப் பதிவு செய்து உடன் விதைப்பில் ஈடுபடும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ரி)

## நூலக பொறுப்பாளர் பதவி வெற்றிடம்

(மானிப்பாய்)

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச்சேவைச்சபையினால் கல்விக் கல்லூரிகள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், தேசிய பாடசாலைகள் ஆகியவற்றில் 1ம், 2ம், 3ந் தர நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ந் திகதிக்கு முன்னர் செயலாளர் கல்விச்சேவைச் சபை, இசுருபாய பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்கள் 29-1-93 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (71)

## மன்னாரில் மண்ணெண்ணைக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் மண்ணெண்ணைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. முன்னர் மாதம் ஒன்றுக்கு 450 பரல் மண்ணெண்ணை வந்துகொண்டிருந்தது. தற்போது 45 பரல்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

மிளகாய்க் கன்றுகள் காயும் பழுக்கும் தரும் பருவத்தில் அவற்றுக்கு நீர் இறைக்க மண்ணெண்ணை இல்லாமையால் பெரும் நட்டத்தை எதிர்நோக்கும் நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இது தொடர்பாகப் பிரஜைகள் குழு, ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மகஜர் ஒன்றைக் கையளிக்க இருக்கின்றது. (ரி)

## ஏப்ரல் முதல் வாரத்தில் 'கம்பன் விழா'

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் 'கம்பன் விழா' ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சிறப்பாக நடைபெறவிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஐந்து நாட்கள் நடைபெற உள்ள இப்பெருவிழாவில், வழமையான பட்டி மண்டபம், கவியரங்கம், வழக்காடு மன்றம், மேன்முறையீட்டு மன்றம், சிறப்புச் சொற்பொழிவுகள், நாடக அரங்கம் உட்பட இம்முறை வேறு பல சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

கடந்த பல வருடங்களாக அகில இலங்கைக் கம்பன் கழகம், 'கம்பன் விழாவை' சிறப்பாக-தமிழுக்குப் பெருவிழாவாக நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## முதலாமிடம்

(கொழும்புத்துறை)

நல்லூர் கோத்தணி மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை 15 வயதுப் பெண்கள் 17 வயதுப் பெண்கள் ஆகிய இரு பிரிவிலும் முதலாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டின -154

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

இ. அந்தோணிப்பிள்ளை, பி. அன்ரனி பெரியவிளான் பண்டத்தரிப்பு என்பவரது இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரண அனுமதி அட்டை 'இ' கோட்டை பண்ணை வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளவும்.

யாழ்ப்பாணம்

# பகலிலும் இரவிலும் தடையின்றி பயணம் செய்ய

# கிளாலிப் பாதையைத் திறக்க உதவ வேண்டும்

## ஜனாதிபதிக்கு சுவாமி சித்ருபானந்தா மகஜர்

(பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம பிரதம குரு சுவாமி சித்ருபானந்தா ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பியுள்ள மகஜரின் விபரம்)

இந்நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில், நாம் முகம் கொடுக்கும் பிரச்னைகள் சம்பந்தமாக 1990ம் ஆண்டு தொடக்கம் தாங்கள் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறீர்கள்.

இந்த இடர்களையும், தாங்கொணா துயரங்களையும் நாங்கள் தங்களுக்கு படம்பிடித்து காட்ட விரும்புகின்றோம். ஏனென்றால் நாங்கள் எல்லோரும் மானிடபிறவிகளே. நாங்கள் இந்நாட்டின் பிரஜைகளே. அத்தோடு பிற சமூகங்களுடன் சமசமமாக வாழ்வதற்கும் உரித்துடையவர்கள் என்பது தங்களுக்கு தெரியும். இது போன்ற பிரச்னைகளை தலைமை தாங்கும் எந்தஒரு அரசாங்கமும் இடகாத்திரமானதும் இறுக்கமானதுமான முடிவுகளை எடுப்பதுடன் தேசிய தீர்க்க தரிசன அணுகு முறையில் இருந்துதான் இந்த பிரச்னையை தீர்க்கவேண்டும்.

இதற்கு முன்னர் பதவி வகித்த அரசின் தலைமைத்துவம், எவ்வளவுதான் படித்தவர்களாக இருந்தபோதிலும், இப்படியான பிரச்னைகளை தீர்ப்பதற்கு இருதயமற்றவர்களாகவே காணப்பட்டார்கள் என்பதை மிகவும், வருத்தத்துடனும் கவலையுடனும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக இப்பகுதி வாழ்மக்களுக்கு மின்சாரம் மறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் நாங்கள் மண்ணெண்ணெய் குப்பி விளக்குகளை உபயோகிப்பதற்கு மனந்தளர்ந்த நிலையில் இருக்கவில்லை ஆனால் வடக்கிற்கு அனுப்பப்படும் மண்ணெண்ணெய் போதியதாக இருக்கவில்லை இன்று இங்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 225 ரூபாவாகும் இதனால் விவசாயம் பெரிதளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்னை தொடங்கிய நாள் தொடக்கம் நாங்கள் பல விதமான பாதைகளை பயன்படுத்தி கொழும்புக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கியநிலையிலும் இப்பயணத்தை கூடிய செலவோடும் செய்ய வேண்டிய நிலையிலும் உள்ளோம். எனவே தங்கள் அரசாங்கம் கிளாலிப்பாதையை எந்தவிதமான தடையின்றி இரவிலும் பகலிலும் செல்லக்கூடிய ஒருநிலையை ஏற்படுத்துவது சரியான தொன்றல்லவா?

அண்மையில் இங்கே மதத் தலைவர் ஒருவர் வந்து திரும்பிய பின்னரும், அவரின் விஜயத்தினால் குறிப்பிடத்தக்க எந்தவிதமான செயல்பாடும் இல்லாதது மிகவும் ஆச்சரிய மூட்டுவதாக இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் யாழ்ப்பாணத்திற்கு துவிச்சக்கரவண்டியில் 50 தடவைக்கு மேல் சென்றுள்ளேன். 50 வயதைக் கடந்த ஒரு சாதுவாகிய நான் 5மைல்கள் துவிச்சக்கரவண்டியில் செல்வது மிகவும் கஷ்டமான தொன்றாக இருக்கிறது. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் 21 மைல்களாகும்.

மிகவும் அத்தியாவசியமானதும் அவசியமானதுமான மருந்து வகைகள் நோய்களை குணப்படுத்துவதற்கு இங்கு இல்லை. இது ஒரு சிறிய தீவு. ஆனால் நாங்கள் அல்லல்பட்டு துன்பப்பட்டு நாளாந்தம் ஜிவனத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம் என்பது தெளிவாகவும், விபரமாகவும் கொழும்பிலுள்ள மக்களுக்கு தெரியவில்லைப்போலத்தோன்றுகிறது.

சுவாமி விவேகானந்தரின் உபந்நியாசங்களை நான்வாசித்திருக்கின்றேன். சுவாமி விவேகானந்தர், புத்தபெருமானின் துறவுநிற நிலையையும், அன்னாரது மேம்பட்ட வாழ்க்கையையும் போற்றியுள்ளதை நான் வாசித்தறிந்திருக்கிறேன். ஆனால் நாங்கள் இங்கு காண்பது அதற்கு முற்றிலும் மாறானதொன்றாகும்.

எங்கள் எல்லோருக்கும் ஒரு திருப்திகரமான வாழ்வு நடத்துவதற்கான அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டுள்ளது. இந்த உண்மையான அவலக்குரல் ஒருசாதுவினுடையதாகும்.

இந்த நிலையில் நாங்கள் துன்பப்படுவதும், துயரப்படுவதும், இறைவன் ஒருவனுக்குத்தான் தெரியும். ஆகையினால் தாங்கள் இக்குறைபாடுகளை மேலும் காலதாமதமின்றி நிவர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நிலத்திலிருந்து பயிலும் மாணவர்கள்

(தாளையடி)

ஆண்டு எட்டு வரையுமுள்ள சுமார் இருநூறு மாணவர்கள் வரை கல்வி கற்கும் தாளையடி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஒரே நேரத்தில் எட்டு வகுப்பு மாணவர்களையும் கட்டடத்தினுள் வைத்து படிப்பிக்க முடியாத காரணத்தினால் இவ் வகுப்பு மாணவர்கள் மரங்களின் கீழ் நிலத்தில் இருந்தே கல்வி கற்கின்றனர். கடும் வெய்யில் நேரங்களில் மரத்தின் கீழ் நிலத்தில் இருந்து மாணவர்கள் பலவித கஷ்டத்தின் மத்தியில் கல்வி பயின்கின்றனர். (163)

## 82 குடும்பங்களுக்கு வதிவிட குடிசைகள்

(தாளையடி)

ஆனைவிறவு, வெற்றிலைக் கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த ஆளியவளைக் கிராமத்தைச் சேர்ந்த எண்பத்திரண்டு குடும்பங்களுக்கு மாமுனைக் கிராமத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை எண்பத்திரண்டு தற்காலிக வதிவிடக்குடிசைகளை அமைத்துவருகிறது. (163)

## 16 வயது முடிந்தோர் அடையாள அட்டை பெறலாம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் 16 வயது பூர்த்தியடைந்தால், தேசிய அடையாள அட்டைகளைப் பெறலாம் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1993 மார்ச் மாதம் 31ம் திகதி 16 வயது முடிந்தவர்களே, அடையாள அட்டைகளைப் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (சு-சி)

## தவக்கால நற்சிந்தனை

''மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லிலும் உயிர் வாழ்கிறான்.'' (மத்4: 4ஆ)

நமக்கு வாழ்வு தரும் வார்த்தைகள் அனைத்தும் அவரிடமிருந்தே வந்துள்ளன. இவ்வார்த்தைகள் உயிருள்ளவை. எம்மை வாழ்விப்பவை. சோதனைகளையும், வேதனைகளையும் நாம் மேற்கொள்ள இவை ஊட்ட மிக்கவையாகும். இறைவார்த்தைக்கு நாளும் செவி மடுப்போம். வாழ்வின் கறைகளைக் களைவோம். நிறை வாழ்வை நாடிச் செல்வோம்.

மோ. தார்சிசியஸ்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி கல்வி அபிவிருத்திச் சபை சார்பாக சாந்தனின் 'அரிச்சந்திரா' நாடகம் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

0 0

(புலோலி)

தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் கோவிலில் இன்று 28ந்திகதி ஞாயிற்றுக்கிழமை (108 சங்குகளால், சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (61)

0 0

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெறும். (72)

0 0 0

(கொழும்புத்துறை)

''சுகம்சுந்தரயோகம்'' என்னும் பொருளிலான யோகாசனக் கருத்தரங்கு ஒன்று இன்று 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (157)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. சி. ஸ்வலிங்கம் தலைமையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இன்று 28ம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க சிறப்பு பொதுக்கூட்டம் இன்று 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

0 0

(கோண்டாவில்)

தவத்திரு சந்தையா (குடை) சுவாமிகள் வருடாந்தக் குருபூசை இன்று 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்திருக்கும் அவரது சமாதியில் நடைபெறும்

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மயிலணி சைவ மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கு நடைபெறும் சிறப்பு விருந்தினராக திரு. ப. விக்னேஸ்வரன் (கொத்தணி அதிபர்) கலந்து கொள்வார்.

## மறியலைத் தொடர்ந்து நிறுத்தப்பட்ட இலவச நிவாரணம் வழங்கப்பட்டது

(தாளையடி)

ஆனைவிறவு, வெற்றிலைக் கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மக்களில் வத்திராயன் மருதங்கேணி கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கு இலவச நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டது. இதனை ஆட்சேபித்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன் தொடர்ந்து மூன்று நாட்கள் இப்பகுதி மக்கள் மறியற்போராட்டம் நடாத்தினர்.

இதனைத்தொடர்ந்து நிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்கும்படி யாழ். அரசாங்க அதிபர் உத்தரவிட்டார்.

இதன்பின் நிவாரணம் நிறுத்தப்பட்ட மக்களுக்கு கிளைகள் மூலம் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. (163)

## பரிசளிப்பு விழா

(புலோலி)

புலோலி மேற்கு அருள்மிகு ஆத்தியடி விநாயகராலய வருடாந்த பரிசளிப்புவிழா ஆலயத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன் ஞானக்குமார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். சட்டத்தரணி இ. உருத்திரா, சுவாமி சித்ருபானந்தா ஆகியோர் இருப்புரைகளை நிகழ்த்தினர். (52)

● அமெரிக்க தலைநகரிலுள்ள

## உலகின் மிகப் பெரிய கட்டிடத்தில் குண்டு வெடிப்பு: எழுவர் கருகிப் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் தலைநகர் நியூயோர்க்கில் உள்ள உலகின் மிக உயரமான 110 மாடிகளைக் கொண்ட 'வேர்ல்ட் ரேட் சென்ரர்' எனப்படும் உலக வர்த்தக மையக் கட்டடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் எழுவர் உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இக்கட்டடத்தில் கார்கள் நிறுத்திவைக்கப்படும் நிலத்தடிப் பகுதியில் குண்டொன்று வெடித்தபோது, அருகிலிருந்த ரயில் நிலையக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது.

குண்டு வெடிப்பை அடுத்து 110 மாடிக் கட்டடத்தில் இருந்து அடர்ந்த கரும் புகை மண்டலம் வெளியேறியதை மக்கள் நேரில் கண்டனராம். குண்டு வெடித்த சில நிமிட நேரத்தில், கட்டடத்தின் மேற்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், இதன்போதே எழுவர் கருகிப் பலியானதாகவும், 200 பேர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டுவெடிப்பையடுத்து நியூயோர்க் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஸ்தலத்திற்கு உடன் விரைந்த பொலிஸார் நிலைமையை உடனடியாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததுடன், புலன் விசாரணையையும் ஆரம்பித்துள்ளனராம்.

அண்மைக் காலமாக நியூயோர்க் நகரில் சமூக விரோதக் கும்பல்களினதும், திட்டமிட்டு நாசகார வேலைகளில் ஈடுபடுவோரினதும், போதை வஸ்துக் கடத்தல்காரர்களினதும் செயற்பாடுகள் தீவிரமாக அதிகரித்து வருவதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## மட்டு. மயிலவெட்டுவான் பகுதியில்
# நெற்சூடுகள் படையினரால் தீமூட்டிஎரிப்பு; ஒருவர் பலி

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலவெட்டுவான் பகுதியில் கடந்த புதன் கிழமை சிறிலங்கா ராணுவம் கிராமத்திற்குள் புகுந்து நெற்சூடுகளை எரித்துள்ளதோடு துப்பாக்கிப் பிரயோகங்களையும் செய்துள்ளனர்.

மயிலவெட்டுவான் வயற் பிரதேசத்தில் சிறிலங்கா ராணுவத்தினரால் நான்கு நெற்சூடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் ராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் பலியானார்.

அதே போன்றதொரு சம்பவம் மட்டு. மாவட்டம் நவிண்டியசமடு என்ற இடத்திலும் நடைபெற்றுள்ளது.

மட்டு. மாவட்டத்தில் அறுவடை மேற்கொள்ளப்படும் ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் ராணுவத்தினர் இத்தகைய அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவது வழக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## மட்டக்களப்பில் நிவாரணம் வழங்க பலத்த கட்டுப்பாடு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த கட்டுப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பல இடங்களில் நிவாரணப் பொருட்களைப் பெறுபவர்கள் இராணுவ முகாம்களில் வந்தே அவற்றைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென இராணுவத்தினர் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

அரச அதிகாரிகள் நிவாரணக் கொடுப்பனவில் மோசடிகளை செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நிவாரணப் பொருட்கள் இராணுவ முகாம்களில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இராணுவமுகாம் சென்றுநிவாரணப் பொருட்களை பெற்றுக்கொள்ள அங்குள்ள மக்கள் தயங்குகின்றனர். (ரி)

## தீவகத்தில் கடமையாற்ற 35 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)
தீவப்பகுதி பாடசாலைகளில் கடமையாற்ற மேலும் 35 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர்கள் புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 35 ஆசிரியர்களில் 6 பேர் பட்டதாரிகள். ஏனையோர் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்களாவர் இவர்களில் 23 பேர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களென்றும் ஏனைய 6 பேரும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-ரி)

## கிராமசேவகர் நியமனங்களை உடன் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)
இடைநிறுத்தி வைக்கப்பட்ட கிராம சேவகர் நியமனங்களை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா அவசர உத்தரவுபிறப்பித்துள்ளார்.

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கு விடுத்த பணிப்புரையிலேயே மேற்கண்ட உத்தரவை அவர் வழங்கியுள்ளாராம். (ச)

## ஆசிரியர் சம்பளப்பணம்

(யாழ்ப்பாணம்)
ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் பணமாக நாளை 1ம் திகதி திங்கட்கிழமை யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் வழங்கப்படவுள்ளது

கடந்த 26ம் திகதியும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. (சி-ரி)

இளாலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஈரசல் என்கிற கருதப்பட்ட மேலும் இருபடையினரின் சடலங்கள் நேற்று இக்கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டதாக படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. (சு-ரி)

யாழ். குடா
(1ம் பக்கத் தொடர்ச்சி)
இணக்கம் தெரிவித்திருப்பதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்பில் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்புக் கடிதங்களே இவ்வாறு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு-ரி)

## படை குற்றச் செயல்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)
இலங்கைபாதுகாப்புப்படையினர் பலவிதமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

படையினர் புரிந்துள்ள பல குற்றச் செயல்கள் தொடர்பாக விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ் விசாரணைகளின்போது குற்றவாளிகளாகக் காணப்படுவோர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. -ரி

படைநடவடிக்கை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மென்று தெரியவருகிறது.

படை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் முப்படைத் தளபதிகள் இம் மீளாய்வு கூட்டத்தில் கலந்துகொள்வர். (ரி)

## ஹட்சன் வீட்டிற்கு குண்டுவீசிய 12 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்

(கொழும்பு)
கொழும்புமாவட்ட எம்.பி. ஹட்சன் சமரசிங்கவின் இல்லத்திற்கு கடந்த ஜனவரி 20ம் திகதி கைக்குண்டு வீசியும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாலும் கருதப்படும் 12 சந்தேக நபர்கள் கொழும்பு மேலதிக நீதவான் கே. ஜயந்த பெரேரா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக இரகசிய பொலிசார் தீவிர தேடுதலை மேற்கொண்டதை யடுத்தே மேற்படி சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனராம். (சு-ரி)

## விமானப்படையினரை பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)
விமானப்படையின் பலத்தை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எயார்மார்ஷல் குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி படைத்தளபதி என்ற வகையில் சகல படையினருக்கும் வசதிகளை செய்து கொடுக்க முன்வந்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

விமானம்படையின் சகல தரங்களிலும் தற்போது பதினையாயிரம் பேர் வரையில் இருப்பதாகவும் இதுமேலும் அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (ரி)

அரசுக்கெதிராக
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வி.பி. யினருக்குமிடையில் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இராணுவத்திற்குள் இருந்து கொண்டு சதிநாச வேலையில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ரி)

பதினொரு ஆண்டுகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் கட்டுரையாளர் திரு. சமித்திர பெர்னாண்டோ எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## 2 மணி வரை திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)
யாழ். பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இயங்கும் பிறப்பு-இறப்பு காரியாலயம் காலை 8-30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை மட்டுமே இயங்கும்.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மேற்படி காரியாலயம் பூட்டப்பட்டிருக்கும். (56)

பதினேழுதமிழ்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
செய்யாது இருந்தமையால் தான் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனியார் வீடுகளில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தொடர்பாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே நீர்கொழும்பு பொலிசார் இவர்களை கைது செய்துள்ளதாகவும் இவர்கள்மேல் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சு-ரி]

வடக்கு கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்வது மக்களை பட்டினி நிலைக்கே இட்டுச் செல்லுமென்று எதிர்கட்சிகள் கண்டித்துள்ளன. யுத்தத்திற்கான செலவைத் தாங்கும் பொருட்டு அரசு விதிக்கும் வரிகள் மக்களின் வாழ்வை பாதிக்கின்றது. இல ஆயுதங்கள் மற்றும் ராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் பல கோடி ரூபாய்களை அரசு செலவு செய்து வருகிறதென்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (ரி)

## எகிப்தில் குண்டு வெடிப்பு அறுவர்பலி; பலர் காயம்

(கெய்ரோ)
எகிப்திய தலைநகர் கெய்ரோவின் மத்திய பகுதியில் கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 14 பேர் வரை படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் அதிகமானோர் வெளிநாட்டவர் என பொலிசார் தெரிவித்தனர்.

முஸ்லிம் தீவிரவாதக் குழுவொன்று இதனைச்செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். தீவிரவாதக்குழு வெளிநாட்டவர்மீது அண்மைக் காலங்களில் தாக்குதல்நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது

## ஷெல் தாக்குதல்

(தாளையடி)
வெற்றிலைக்கேணி இராணுவமுகாமில் இருந்து நேற்று முன்தினம் பகல் இரவு வேளைகளில் முகாமின் மேற்குபக்கம் நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. மாசார் சோறன்பற்று கிராமங்களை அண்டிய பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுந்துவெடித்தன.

இதேவேளை நேற்று பகல் முழுவதும் கடற்படையின் பாரிய கப்பலொன்று வெற்றிலைக்கேணி முகாமை அண்டிய கடல் பகுதியில் நங்கூரமிட்டிருந்தது. கப்பலில் இருந்து கரையை நோக்கி சிறிய படகுகள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தன. (163)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் அரச கணக்காளர்களின் பங்குனி மாதத்தின் கூட்டம் யாழ் நாவலர் கலாச்சாரமண்டபத்தில் நாளை 2ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு பிரதம கணக்காளர் திரு எஸ் சிவபாலன் தலைமையில் நடைபெறும்

மீட்பு நிதி
(1-ம பக்கத் தொடர்ச்சி)
சேர்ந்தோரும் மீட்பு நிதியை செலுத்தலாம்என்று மீட்புநிதி பொருப்பாளர் அறிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள
(1-ம பக்கத் தொடர்ச்சி)
பொருட்களுக்கு நிலவும் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்ய உடனடியாக ஆவண செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இக்கோரிக்கையை அடுத்து அரச அதிபர் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாரிய கப்பல் ஒன்றின் மூலம் அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப அரச அதிபர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (157 ரி)

படை ஆக்கிரமிப்பு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திசை அபிவிருத்தி செய்ய ஆராயவென அமைச்சர் காமினி அத்துக்கொறள அண்மையில்பாவற்குளம் சென்றார்.

இராணுவத்தினர் வசமிருக்கும் கனேசபுரம், சமயபுரம், ஒலுக்குளம், குடிகண்டபுலவு, நெலுக்குளம் பகுதிகளுக்கும் விஜயம்செய்தார்.

அமைச்சரின் இந்த விஜயம் இப்பகுதியில் சிங்கள, முஸ்லிம் வாசிகளை குடியேற்றுவதற்கான நடவடிக்கையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பாவற்குளத்தை 125 லட்சம் ரூபா செலவில் திருத்துவதற்கும்திட்டமிடப்பட்டுள்ளது

## உதைபந்தாட்டம் சென்.ரேக் அரியாலை வெற்றி

(யாழ்ப்பாணம்)
யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினர் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக நடாத்தி வரும் உதையந்தாட்ட நொக் அவுட் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகமும், சென். பீற்றர்ஸ் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

பொலிஸ்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கோஷ்டியை சேர்ந்த ஒருவர் 38 ரிவோல்வர் ஒன்றினால் அவரைச் சுடமுயன்றபோது அவர் அந்த இளைஞரை சுட்டுக்கொன்றுள்ளாராம்.

தற்போது இதுபற்றி விசாரணைகள் நடைபெற்றுவருகிறது. (சி-ரி)

## வயிற்றோட்டம் பரவுகிறது

(அரியாலை)
யாழ். குடாநாட்டுப்பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்து தனியார் வீடுகளிலுள்ள சிறுவர்களுக்கும் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுள்ளது. (59-ஙி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible]கோவில் மேற்கு வீதி, 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B